## 8

# "இப்பொழுது நீங்கள் உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்கிறீர்கள்"

## (எபேசியர் 5:8-14)

நீங்கள் ஒரு கல்லறைக்குச் சென்று அங்கு கட்டப்பட்டுள்ள கல்லறைத்திடலின் மேல் எழுதப்பட்ட வாசகத்தை வாசிப்பீர்களானால், அங்கு அடக்கம் பண்ணப்பட்டவரின் வாழ்க்கை வரலாறு பொறிக்கப்பட்டிருக்கும். சில பொதுவான வாசகங்கள் அமெரிக்க கல்லறைகளில் எழுதப்பட்டவை: "இவள் ஒரு நல்ல தாயாக இருந்தார்"; "பரிசுத்தவானாகிய தகப்பன் பரலோகத்திற்கு போயிருக்கிறார்." "உண்மையுள்ள தகப்பன், பிரியமுள்ள கணவன்"; சில கல்லறைக் கற்களில் நீண்ட வாசகங்கள் காணப்படுவதுண்டு. ஒரு கல்லறை நிலத்தில், ஒரு சிறுபெண்ணின் புதைக்கப்பட்ட இடம் கண்டுபிடிக்கப்பட்டது. அதில் ஒரு கருங்கல்லில் (கிரானைட்கல்) உளியால் வடிக்கப்பட்ட எழுத்துக்கள் அந்த சிறு பெண்ணின் கல்லறையில் இருந்தது. அந்த எழுத்தின் வாசகம்: "தன்னுடன் படித்த வகுப்புத் தோழிகள் சொன்னார்கள், 'இவள் எங்களுடன் இருந்த காலத்தில் நாங்கள் நல்லவர்களாக இருப்பது சுலபமாயிருந்தது.' " அந்த சிறு பெண்ணைக் குறித்த முன் உதாரணமான இந்த விமர்சனம் கிறிஸ்தவர்கள் தங்கள் நல்ல செல்வாக்கை பராமரிப்பது எவ்வளவு சிரமமானது என்பதை தெளிவுபடுத்துகிறது.

கிறிஸ்தவராகிய நீங்கள், இதற்கு முன்பு பெற்றிராத ஒரு பலமான செல்வாக்கை நல்லதுக்காக பெற்றுள்ளீர்கள்! கர்த்தர் இதன் வல்லமையை குறிப்பிட்டுச் சொன்னார், "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள் ... நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" என்றார் (மத்தேயு 5:13, 14அ). ஒருவர் தனது செல்வாக்கையும் அதன் வல்லமையையும் கண்டு கொள்ளாமலிருப்பது மதியீனம் நிறைந்த மேலோட்டச் செயல். ஒரு கிறிஸ்தவன் தனக்குக் கொடுக்கப்பட்டுள்ள புதிய வல்லமை நிறைந்த சுய செல்வாக்கை தேவனைப் மகிமைப்படுத்த பயன்படுத்தும்படி எதிர்பார்க்கப்படுகிறார். எபேசியர் 5:8-14 பக்திக்குரிய செல்வாக்கைக் குறித்து விவாதிக்கிறது.

எபேசியரின் இந்த வசனப் பிரிவைப்பாருங்கள், சரியான செல்வாக்கை அபிவிருத்தி பண்ணவேண்டியதன் அவசர அவசியத்தைக் கண்டு பிடியுங்கள். உலகில் இருப்பவர்கள் இரட்சிப்பின் ஆசீர்வாதங்களை கண்டு பிடிக்க உதவும் பொருட்டு தேவனைப் பின் பற்றுபவர்கள் நல்லதொரு முன் மாதிரியை உடையவர்களாயிருக்க வேண்டுமென்று வேத வசனங்கள் குறிப்பிடுகின்றன.

நீங்கள் இப்பொழுது தேவனுக்குச் சொந்தமானவர்கள்; ஆகையால், தேவபக்திக்குரிய செல்வாக்கை நீங்கள் பராமரிக்க வேண்டும்.

## கடமை (5:8)

அஞ்ஞான மதத்தார் "அசரீரி குரல்" வாழ்க்கையில் இரகசியமாகக் கிடைக்கும் வரை ஒருவரது புரிந்து கொள்ளுதலில் குறைபாடு இருக்கும் என்று போதிக்கின்றனர். அசரீரி மூலமாய் வெளிப்பாட்டைப் பெற்றோம் என்பவர்கள் "ஞானோதயம் பெற்றவர்கள்" என்றழைக்கப்பட்டனர். இருளில் (சூனியமாய்) காணப்பட்ட அவர்களுடைய மனம் இப்பொழுது அறிவொளி அடைந்துள்ளது என்று நம்புகிறார்கள். மற்றவர்கள் வாழ்க்கையின் குழப்பநிலைக்கு ஆலோசனைகேட்டு அந்த "ஞானோதயம்" பெற்றவர்களை நாடித் தேடுகிறார்கள்.

பவுல் கிறிஸ்தவர்களை அடையாளப்படுத்தி அவர்களே உண்மையாய் பிரகாசிக்கப்பட்டவர்கள் என்றார். எபேசு பட்டணத்து சபையார் ஒரு காலத்தில் இருளில் வாழ்ந்தவர்கள், ஆகிலும் அவர்கள் இருளிலிருந்து ஒளிக்குத் திரும்பிய போது மாற்றம் வந்தது. அவர்கள் சுவிசேஷத்தைக் கேட்டு, அதைப் புரிந்து கொண்டு, விசுவாசித்துக் கீழ்ப்படிந்தார்கள் (நடபடிகள் 26:14-19; கொலோசெயர் 1:13). ஒருவர் இருளைவிட்டு வெளிச்சத்துக்கு வருவதை தெரிந்து கொள்ளும்போது, அந்தத் தெரிந்துகொள்ளுதல் அவரை முற்றிலும் வித்தியாசமான வழியில் வாழ எதிர்பார்க்கிறது. இதன் விளைவாக, கிறிஸ்தவன் தனது பழைய வாழ்க்கையின்படி வாழ மறுத்து அதினிமித்தம் அநேக விதமான ஜனங்களைத் தவிர்க்கிறார்கள் (5:7); மாறாக, இப்பொழுது அவர் "வெளிச்சத்தின்" தன்மையுடைய வாழ்க்கையை வாழ்கிறார்.

தேவ பக்தியின் செல்வாக்குள்ள வாழ்க்கையை வாழும் கடமையையை "வெளிச்சத்தின் பிள்ளைகள்" என்கிற உணர்வின் சொற்றொடராகப் பேசுகிறது. தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தவர்கள் வெளிச்ச உலகிற்குள் வரும் பொருட்டு இருள் உலகத்தை விட்டு வந்தது மாத்திரமல்ல, நிஜவெளிச்சமாகவே மாறினார்கள் (யோவான் 8:12). ஒரு கிறிஸ்தவர் தேவனைப் பின்பற்றுகிறவராவதோடு எல்லா இருளையும் விட்டு விடும்படியாகவும் எதிர்பார்க்கப்படுகிறார் (1 யோவான் 1:5).

ஆச்சரியமளிக்கத்தக்க இந்த இருளிலிருந்து வெளிச்சத்துக்கு வரும் மாற்றமே உண்மையான மன மாற்றத்திற்கு ஒரு சாட்சி. ஒரு வழிப்போக்கன் சீனாவில் பயணித்த போது நடந்த ஒரு கதை சொல்லப்படுவதுண்டு, அவர் ஒரு கிராம நபரைப் பார்த்து எப்பொழுதாகிலும் சுவிசேஷம் பிரசிங்கிக்கப்பட்டதைக் கேள்விப்பட்டதுண்டா என்று கேட்டார். அந்தக் கிராமத்துக்காரர் மறுமொழியாக, "இல்லை, சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டதை நான் கேள்விப்பட்டதில்லை, ஆனால் நான் பார்த்திருக்கிறேன். மற்றொரு கிராமத்தில் இருந்த ஒரு நபர் தன் அயலாருக்கு பயமுறுத்தலாக வாழ்ந்து வந்தார். அவர் மிகவும் வன்கொடுமை மிக்கவராயிருந்தார். அவர் அபினி எனும் போதைப் பொருளை புகைப்பவராகவும், கிரிமினல் குற்றம் புரிபவராகவும், பயங்கரவாதியாகவும் இருந்தார். ஆனால் சுவிசேஷம் அவரை மாற்றியிருந்தது. அவர் சாந்த குணமுள்ளவராகவும் நல்லவராகவும் மாறினார். இனியும் அவர் அபின் புகைப்பதில்லை. இல்லை, நான் சுவிசேஷத்தைக் கேட்டதில்லை; ஆனால்

*பார்த்திருக்கிறேன், அது மிகவும் நல்லதாயிருக்கிறது!" என்றார்.*

*மனமாற்றத்தின் மூலம் வரும் மாறுதல்களை ஒவ்வொரு கிறிஸ்தவனும் வெளிப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறான். திருமறை வாக்கியங்கள் நேரிடையானவை: "ஒளியின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள்." நீங்கள் உண்மையாகவே பரலோகப் பிதாவின் பிள்ளை என்பதையும், உங்களுக்குள்ளே "இருள் கொஞ்சமும் இல்லை" என்பதையும், வெளிப்படுத்தப்பட்டபடியான வழியில் நீங்கள் வாழ்ந்து காட்டும்படி எதிர்பார்க்கப்படுகிறீர்கள் (1 யோவான் 1:5). நீங்கள் "ஒளியின் பிள்ளைகளில்" ஒருவராக இருப்பதற்கான சாட்சியமாக உங்கள் செல்வாக்கு எவ்வாறு உதவுகிறது?*

## குறிப்பிடத்தக்க பண்பு (5:9)

*கிறிஸ்தவர்கள் "ஒளியின் பிள்ளைகளாய்," நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுவதில் எவ்வித கேள்விக்கும் இடமில்லை, கடமையை நிறைவேற்றுவதில் என்னவெல்லாம் உட்படுத்தப்பட்டுள்ளது என்பதை சிலரால் பற்றிக்கொள்ள இயலாமலிருக்கலாம். தமது ஏவுதலால், பவுல் கிறிஸ்தவ செல்வாக்குக்கான போஷாக்கையும் பாதுகாப்பையும் வரிசைப்படுத்துகிறார்.*

*முதலாவதாக, நன்மையை பயிற்றுவித்துக் கொள்ளுங்கள்.* இந்தப் பண்பு கிறிஸ்தவர்கள் பராமரிக்க வேண்டியதன் செல்வாக்கை நிச்சயமாக விவரிக்கிறது. "நன் செய்தல்" என்பது இரக்கத்தையும் உதவி செய்தலையும் வலியுறுத்தும் ஒரு ஒழுக்கம். நன்மை செய்வதில் பெயர்பெற்ற ஒரு நபர் முற்றிலும் நேர்மறை எண்ணங்களையும் சிந்தனையும் உள்ளவராயிருப்பான்; அவன் எப்பொழுதும் நல்ல செயல்களையே செய்து கொண்டிருப்பான். அவனுடைய நல்ல இருதயம் அவனை நல்ல நடத்தையுடையவனாயிருக்கச் செய்கிறது. கிறிஸ்தவனின் நடத்தை எப்படி நன்மை செய்வதில் நிறைந்து இருப்பவனாக்குகிறது? அவன் எல்லாரையும் அன்பாயும் நியாயமாயும் நடத்துவான். அவன் யாரையும் தனக்கு சாதகமாக்கிக் கொள்ள மாட்டான், நெருக்கடியில் இருப்பவர்களை பாதுகாப்பான். நன்மை செய்தலில் சிட்சித்தல், கடிந்து கொள்ளுதல், உபதேசம், அதே போல அன்பு, ஆழ்ந்த சிந்தனை, உதவிசெய்தல் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியது. நன்மை செய்தலினால் கட்டுப்பட்டவன் தீமையான காரியங்களை ஒப்புக் கொள்ள மாட்டான் அல்லது தீமையை கடிந்து கொள்ளாமல் விட மாட்டான். தன்னால் ஆனமட்டும் தீமையை தடுத்து நிறுத்தவே முயற்சிப்பான்.

*இரண்டாவதாக, நீதிக்கு முன்மாதிரியாய் இருங்கள்.* "நீதி" என்பது ஒரு நபர் சரியானவராய் *இருக்கிறார்*, மற்றும் அவர் சரியானவற்றையே *செய்கிறார்* அவர் செய்வதெல்லாம் சரியானதாயிருக்கும் என்று கருதப்படும். தேவனோடு உள்ள உறவுமுறையிலும் தேவன் தன்னிடம் எதிர்பார்க்கும் செயலை செய்து வாழ்வதிலும் கிறிஸ்தவனுடைய செல்வாக்கு அவனுடைய நீதியினால் ஆட்கொள்ளப்படுகிறது. நீதி விசுவாசத்தினால் கட்டுப்படுத்தப்படுகிறது (ரோமர் 4:1-3, 22; 5:1). தனிப்பட்ட ஒருவர் தேவனிடத்தில் விசுவாசம் வைத்து தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியும்போது அவர் "நீதியில் சிருஷ்டிக்கப்படுகிறார்" (எபேசியர் 4:23, 24). நீதியினால் நிரப்பப்பட்டுள்ள ஒரு இருதயம் சரியான செல்வாக்கைப் பராமரிக்க அவனுக்கு உதவி செய்கிறது ஏனெனில் அவன் சரியாக இருக்க ஆசைப்படுகிறான் மற்றும் சரியானதைச் செய்ய விரும்புகிறான். அவன் வாழ்வில் கற்பு ரீதியிலான அல்லது ஒழுக்க ரீதியிலான காரியங்களை

*தெரிவு செய்கிற விஷயங்களை அவன் எதிர்கொள்ளும்போது நீதி அவனுக்கு நினைப்பூட்டி, "தேவனிடத்தில் இது சரியானதாயிருக்கக் கூடுமா? அதைச் செய்வது சரியா?" என்று அவனைக் கேட்க வைக்கும்.*

*மூன்றாவதாக, சத்தியத்தைப் பற்றிக்கொண்டிருங்கள்.* கிறிஸ்தவன் முழுமையாக சத்தியத்தைப் பின்பற்றுவதால் அவனுடைய செல் வாக்கு சரியானது. உலகம் பொய்யையும் வஞ்சிக்கிற காரியங்களையும் பயன்படுத்துகிறது. தேவ பக்தியில்லாதவன் சத்தியம் முழுமையானது என்பதை ஏற்றுக் கொள்ள மாட்டான். தேவனை அறிந்தவர்கள் சத்தியம் நிலைத்திருக்கிறது என்பதையும் எப்பொழுதும் மாறாததாயிருக்கிறது என்பதையும் உணர்ந்து கொள்வார்கள். கிறிஸ்தவன் தன்னுடைய செல்வாக்கில் தொடர்ந்து கவனமாக நிலைத்திருக்கிறான், இல்லாவிட்டால் அவன் சத்தியத்தில் தொடர்ந்து இருக்கமாட்டான். தங்களுக்கு வசதிப்படும் வரையில் அல்லது ஆறுதல் கிடைக்கும்வரை சத்தியத்தை அநேகர் பின்பற்றுவார்கள். சில நேரங்களில், ஜனங்கள் தாங்கள் விரும்புவற்கு விரோதமாக தேவனுடைய சத்தியம் இருப்பதாக உணரத்துவங்கும் போது, அவர்கள் கலக்கமடைவார்கள். ஒரு தேவ பக்திக்குரிய செல்வாக்கு கிறிஸ்தவனுக்குரியது. அவர் சத்தியத்தை விடாமல் பற்றிக் கொண்டு கவனமாய்ப் பின்பற்றுகிறார்.

நீங்கள் இப்பொழுது ஒரு கிறிஸ்தவரானதால், நீங்கள் "வெளிச்சமாகவும்" "உப்பாகவும்" மாற வேண்டியது உங்கள் கடமை. மற்றவர்கள் தேவனுடைய வசனத்தை புரிந்து கொள்ளச் செய்யவும் அவருடைய கட்டளைக்கு கீழ்ப்படியச்செய்யவும் உங்கள் செல்வாக்கு பயன்பட வேண்டும், இதை நீங்கள் எப்படி சாதித்துக் காட்டுவீர்கள்? நன்மை செய்வதினாலும் நீதி செய்வதினாலும் ஒவ்வொரு தெரிவுசெய்யும் காரியத்திலும் செயலிலும் சத்தியத்தை பின்பற்றுவதன்மூலம் செய்ய முடியும்!

## செயல்படுத்தும் முறை (5:10)

5:8ல் கிறிஸ்தவனின் கடமையை தனது சரியான செல்வாக்கின் மூலம் விளக்கப்பண்ண வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இதை நாம் எப்படிச் செய்வது என்பதற்கான சரியான வழிமுறை சொல்லப்பட்டுள்ளது. நமது வாழ்வில் நாமே தெரிந்து கொள்ளும் உரிமை நமக்கு உள்ளதால், "வெளிச்சத்தின் பிள்ளையாக" நாம் நடந்துகொள்ள சிறந்தவைகளை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு கிறிஸ்தவன் எப்படித் தன்னுடைய வாழ்க்கையில் தெரிவு செய்து கொள்வான் என்பதற்கு பவுல் பயன்படுத்தும் வார்த்தை "கற்றுக்கொள்ள முயற்சிப்பது" என்பதாகும், கிரேக்க பதம் மற்ற இடங்களில் "நிச்சயித்துக் கொள்ளல்" அல்லது "அங்கீகாரம்" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது (காண்க ரோமர் 14:22; 1 கொரிந்தியர் 16:3). கிறிஸ்தவன் கர்த்தர் தன்னை என்ன செய்ய விரும்புகிறார் என்பதை சிந்தித்து, மதிப்பிட்டு, பரீட்சித்துப் பார்த்து தனது செல்வாக்கின் தெரிவைக் காத்துக் கொள்கிறான்.

உங்கள் கிறிஸ்தவ செல்வாக்கை காத்துக் கொள்ள நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். தேவனுடைய முழுமையான சத்தியத்தின் அறிவை திருமறை உங்களுக்கு கொடுத்திருக்கிறது. ஆகிலும், தேவனுடைய வசனம் உபதேசக் கோட்பாடுகளைப் போதிக்கிறது; அது உங்கள் கடமைகளில் சுதந்திரமாய்

*செயல்படவோ, சூழ்நிலையை எண்ணி தேவபக்திக்குரிய தெரிவை செய்து கொள்ளவோ அனுமதிப்பதில்லை!*

*நீங்கள் என்ன செய்ய வேண்டும், என்ன சொல்ல வேண்டும், எப்படி உடையணிய வேண்டும், எங்கே போவது, யாருடன் பழக்கம் வைத்துக் கொள்ள வேண்டும் என்பது போன்ற காரியங்களில் முடிவு எடுக்க வேண்டியவர் நீங்கள்தான். ஏன்? ஏனெனில் உங்கள் செல்வாக்கு இப்படிப்பட்ட தெரிவுகளிலே (முடிவெடுப்பதிலே) சார்ந்துள்ளது! இனியும் நீங்கள் இருளிலே நடப்பவரல்ல; இப்பொழுது நீங்கள் ஒரு வெளிச்சத்தின் பிள்ளை, உங்கள் தெரிவு உங்கள் செல் வாக்கில் சாதகபாதகங்களை ஏற்படுத்தும். உங்கள் முடிவு எடுத்தல் உங்களையோ அல்லது மற்றவர்களையோ பிரியப்படுத்துவதற்காக அல்ல (கலாத்தியர் 1:10), ஆனால் கர்த்தரைப் பிரியப்படுத்தவே (2 கொரிந்தியர் 5:9; பிலிப்பியர் 4:18; கொலோசெயர் 1:10). நீங்கள் ஒளியின் பிள்ளையாய் நடந்து கொள்ள வேண்டும், ஏனெனில் அப்படிச் செய்வதால் நீங்கள் தேவனைப் பிரியப்படுத்துவீர்கள்.*

## *போராட்டம் (5:11, 12)*

*உங்கள் மதிப்பைக் காப்பாற்றிக் கொள்வது எப்பொழுதும் சுலபமாக இருந்து விடாது. உங்கள் செல்வாக்கை தவறானவைகளில் ஒத்துப்போகச் செய்வதைத் தெரிவுசெய்து கொள்ளும்படி சம்மதிக்க சாத்தான் தன்னால் ஆன எல்லாவற்றையும் செய்வான். அதனால்தான் பவுல் கிறிஸ்தவர்களை குறிப்பிட்ட சில நபர்களையும் அவர்களது செயல்களையும் தவிர்க்கும்படி அறிவுறுத்தினார் (1 கொரிந்தியர் 15:33; 1 தீமோத்தேயு 6:3-21).*

*இருளில் நடப்பிக்கப்படும் பாவங்களை “எதிர்க்கிற” அளவுக்கு கிறிஸ்தவ செல்வாக்கு பலமுள்ளதாயிருக்க வேண்டும். அநேகக் கிறிஸ்தவர்கள் அமைதலாயிருந்து இருளில் நடப்பிக்கப்படும் பாவக்கிரியைகளை சவாலற்ற ரீதியில் அனுமதித்திருக்கிறார்கள். மிகவும் வெட்கக்கேடான செயல்களை பொது இடங்களில் விவாதிப்பதும், அவைகள் ஒருபோதும் கடிந்து பேசப்படாததுமான பாவங்கள் தைரியத்தோடு நடப்பிக்கப் படுகின்றன! துணிச்சலான பாவம் அடிக்கடி கிறிஸ்தவர்களிடத்தில் நெருங்குகிறது, அவர்களின் அமைதி அவர்களுடைய செல்வாக்கை பெலவீனப்படுத்துகிறது. இப்டிப்பட்ட அச்சத்தை எதிர்த்து போராடும் பொருட்டு பவுல், “தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார். ஆகையால் நம்முடைய கர்த்தரைப் பற்றிய சாட்சியைக் குறித்து வெட்கப்படாதிரு” என்று எழுதினார் (2 தீமோத்தேயு 1:7, 8அ).*

*தனது செல்வாக்கை தவறானவைகளோடே ஒத்துப்போகச் செய்யும் ஒருவனிடத்தில் அல்லது ஒருத்தியினிடத்தில் கலந்து கொண்டு செயல்படும்போது தான் கிறிஸ்தவர்களுக்கு மாபெரும் சோதனைகள் வந்து சேருகிறது. “ஒளியற்ற” “அந்தகார” கிரியைகளுக்கு விலகியிருக்க கிறிஸ்தவன் கடமைப் பட்டிருக்கிறான். “ஒளியால்” வெளிப்படுத்தப்படும்போது “அந்தகாரம்” வசதியற்றதாக உணர்கிறது (யோவான் 3:19, 20). “அவமதிப்பிற்குரிய” காரியங்களை செய்பவர்களோடு “கலந்திருந்து” செயல்புரிதல் மூலம் கிறிஸ்தவன் ஒருபோதும் தனது செல்வாக்கின் மதிப்பை உயர்த்திக் கொள்ள இயலாது.*

*நீங்கள் கிறிஸ்தவனாக மாறியதால், வெளிச்சத்துக்கும் இருளுக்குமிடையிலான போராட்டத்தில் இணைந்துள்ளீர்கள். நீங்கள் இருளை*

எதிர்கொள்ளும்போது கோழையாக இருந்துவிடாமல் திடமனதாயிருங்கள். உங்கள் வெளிச்சம் பிரகாசிக்கட்டும்! இராணுவத்தில் சேர்க்கப்பட்ட ஒரு வாலிபனைப் பற்றிய கதை சொல்லப்படுவதுண்டு. ஒவ்வொரு இரவும் திருமறையை வாசித்து முழங்கால் படியிட்டு ஜெபிப்பது அவனுடைய வழக்கமாயிருந்தது. தனது ராணுவவீரர் குடியிருப்பில் முதல்நாள் இரவே, அவன் இக்கட்டான நிலையை சந்தித்தான். சக படைவீரர்கள் தன்னைச் சூழ்ந்துகொண்டு ஒழுங்கீனமான காரியங்களைப் பேசி கேலி கிண்டல் செய்து சபிக்கிறவர்களாய்க் காணப்பட்டனர். அந்த வாலிபன் தன் திருமறையை வாசித்து ஜெபித்தால், தன்னைப் பரியாசம் பண்ணுவார்கள் என்று அவனுக்குத் தெரியும். எனவே அந்த இராணுவ வீரர் குடியிருப்பை விட்டு ஒரு இரகசிய இடத்தைக் கண்டுபிடித்து அங்கே திருமறையை வாசிக்கவும் ஜெபிக்கவும் தீர்மானித்தான். பிறகு இந்த முடிவு தேவனுக்குப் பிரியமாயிராது என்று உணர்ந்தான். மாறாக, அமைதியாக தனது படுக்கைக்குப் போய், உட்கார்ந்து, தனது திருமறையைத் திறந்து வாசித்து, ஜெபம் பண்ணினான். அந்த இராணுவக்குடியிருப்பில் அமைதி சூழ்ந்தது, எல்லாக் கண்களும் அவனை நோக்கிப் பார்த்தன. சிறிது நேரத்துக்குப் பிறகு சில பரியாசச் சொற்கள் பேசப்பட்டன, சிலர் அவனை கேலி செய்தனர், ஆனால் அந்த வாலிபன் நிறுத்துவதில்லை என்று முடிவு செய்து ஜெபித்தான். அடுத்த நாள் இரவும் அப்படியே செய்தான், குறைவான பரியாச வார்த்தைகளே பேசப் பட்டன. ஆறு மாதத்தில், மற்றவர்களும் தங்கள்திருமறையை வாசித்து தூங்குவதற்கு முன் ஜெபித்தார்கள். ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில், அந்த மனிதனை பரியாசம் பண்ணினவர்களில் பெரும்பாலானோர் அவனுக்காக யுத்தம் பண்ண விரும்பினார்கள் ஏனெனில் அவர்கள் அவனை மதித்தார்கள்.

ஆம், போராட்டங்கள் உங்கள் வாழ்க்கையிலும் கர்த்தரை நீங்கள் பிரியப் படுத்தும்படி தெரிந்து கொள்வதால் (சோதனை) வரும். ஆனால் இந்த போராட்டம் உங்கள் செல்வாக்கு தவறோடு ஒத்துபோகத் தக்கதாக விட்டு விடாதீர்கள்.

## திடீர் தாக்கு (5:13, 14)

கிறிஸ்தவனின் செல்வாக்கு மற்றவர்களுக்கு சத்தியத்தைப் பற்றிய பிரகாசம், நீதி நன்மை செய்தல் ஆகியவற்றை உண்டாக்க உதவிசெய்ய வேண்டும். அவன் அமைதியாக இருந்து விடக்கூடாது. ஏனெனில் அவன் ஒரு சக்தியாக தன் கலாச்சாரத்தில் விளங்க வேண்டிய கடமைப்பட்டவன். உப்பும் வெளிச்சமும் அவைகளுக்குரிய சக்தி இல்லாவிட்டால் சுற்றுப்புற சூழலை செல்வாக்கு செலுத்த அவைகள் பயனற்றவை!

தேவபக்தியின் செல்வாக்கு முனைப்புடன் போராட வைத்து, தீமைக்கு எதிராக "திடீர் தாக்குதல்" ஏற்படுத்தி பாவச் செயலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் நபர்களை சந்தேகத்துக்கு இடமில்லாமல் "விழித்தெழ[வும்]" பண்ண வேண்டும். கிறிஸ்தவர்கள் உலகத்தை தங்கள் செல்வாக்கால் கொண்டுவந்து நல்ல விளைவுகளை ஏற்படுத்துவதால் அற்புதமான மனநிறைவைக் கண்டுபிடிக்க முடியும்!

நீங்கள் இப்பொழுது ஒரு கிறிஸ்தவர் என்பதால், உங்களுக்குள்ளே நம்ப இயலாத அளவு செல்வாக்குகளை கொண்டிருக்கிறீர்கள். உங்களுடைய தெரிந்து கொள்ளுதலின் திறமையினாலே, எங்கே போவது, என்ன செய்வது,

எப்படிப் பேசுவது, தோழமைகளை எப்படித் தெரிவு செய்வது ஆகியவற்றையும், இருளில் வாழ்வோருக்கு வெளிச்சத்தில் நடப்பதால் வரும் ஆசீர்வாதங்களையும் காட்டுவீர்கள். தேவனிடத்தில் நீங்கள் வைத்துள்ள நம்பிக்கையின் விசுவாசத்தால் உங்கள் முன் உதாரணம் சந்தோஷத்தையும் நன்றியறிதலையும் அநேகருடைய வாழ்வில் கொண்டு வரும் (1 தெசலோனிக்கேயர் 1:2-10).

## நிறைவுறும் சிந்தனைகள்

எபேசியர் 5:8-14 கிறிஸ்தவர்களுக்கு கொடுக்கப் பட்டுள்ள எச்சரிக்கைகளால் நிறைந்துள்ளது. உங்கள் செல்வாக்கைக் காப்பாற்றிக் கொள்வதில் நீங்கள் கவனமாயிருக்க வேண்டும். உண்மையில் அதிக பட்ச எச்சரிக்கை 5:16ல் சொல்லப் பட்டுள்ளது. கவனமற்ற வாழ்க்கையால் உலகத்தின்மேல் உள்ள உங்கள் தாகத்தை நீங்கள் இழந்துபோகக் கூடும்.

தனது செல்வாக்கை காத்துக் கொள்ளாத கிறிஸ்தவன் மன ஆறுதலற்றவனாயிருப்பான். இந்த துன்பியலை விளக்கி, 1930களில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் குத்துசண்டையைத் தொழிலாகக் கொண்டிருந்த நபரைப் பற்றிய நகைச்சுவைக் கதையுண்டு. அவருடைய பெயர் C.D. பிலாலாக். மற்ற குத்துச் சண்டை வீரர்களின் பெயர்களை உடனடியாக மனதில் கொண்டு வருவது போல, இவருடைய பெயரை கொண்டு வர முடியாது, ஆனாலும் பிலாலாக்கின் குத்துச் சண்டை நிகழ்ச்சிகள் மறக்கவே முடியாதவை; பிலாலாக் இன்னொரு குத்துச் சண்டை வீரரிடம் மோத அந்த மேடையில் காலெடுத்து வைத்தார், போட்டி துவங்கியது. அந்த விளையாட்டுப் போட்டியில், ஒரு அதி விசித்திரமான குத்துச் சண்டையின் சுவாரசியமான மணித்துளிகளின் வரலாறுகளில் ஒன்றாக நிகழ்ந்தது. பிலாலாக் தன் முஷ்டியை வேகமாக வீசி எதிரியைத்தாக்க முற்பட்ட போது, எதிரி வீரர் அடிவாங்குவது போல் போக்குக் காட்டி விலகிக் கொண்டார். பிலாலாக் தன் எதிரியை தாக்குவதில் குறிதவறி தன்னைத்தான் தாக்கிக் கொண்டார். எல்லாரும் பார்த்துக் கொண்டிருக்க பிலாக் தள்ளாடி எழும்பவே முடியாமல் கீழே விழுந்து விட்டார். வரலாற்றிலேயே தன்னைத்தானே தாக்கிக் கொண்ட ஒரே குத்துச்சண்டை வீரர் அவராகத்தானிருக்கும்![1]

பிலாலாக் தனக்குத்தானே செய்து கொண்டது போல தங்களுடைய செல்வாக்கை நிலைநாட்ட தங்கள் சொந்த முடிவெடுப்பது எவ்வளவு பரிதாபத்துக்குரிய செயல்! சிலர் தெரிந்து கொள்ளும் வாழ்க்கை முறைசெயல் விளைவு நல்லதாக முயற்சித்தாலும் பெலனற்ற அடியாய் விழுகிறது. இது கட்டுப்படுத்தப்படாத கோபம், கடின வார்த்தைகள், கெட்டவார்த்தையும் பழக்கங்களும், கட்டுப்படுத்தப்படாத உணர்ச்சிகள், உலக பொழுதுபோக்கு (களியாட்டு), அல்லது எண்ணில்லாத மற்ற சரியற்ற செயல்கள் இடம் பெறும்போது இப்படி நடக்கக்கூடும். கிறிஸ்தவராக இருப்பதால், நீங்கள் தேவனுடைய சொந்த ஜனமாக பரிசுத்தமாக்கப்பட்டவர் என்பதை, நினைவில் கொள்ளுங்கள், ஆகையால், நீங்கள் நன்மை செய்தலையும், நீதியையும் உண்மையையும் விளங்கப்பண்ண வேண்டியவர். நல்லது செய்வதாக நினைத்து செய்ததன் விளைவு உங்கள் செல்வாக்கை இழக்கச் செய்யும் வாழ்வின் விபரீதத்தைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் (1 கொரிந்தியர் 9:26, 27).

கிறிஸ்தவ செல்வாக்கினால், தேவனுடைய சத்தியத்தின் ஒளியை மற்றவர்கள் காண உதவி செய்யும் பலன் உங்களுக்கு உண்டு. ஒரு நல்ல முன்

*மாதிரியைக் காட்டுவதன் மூலம், மற்றொரு நபரை நீங்கள் பாவ இருளிலிருந்து தப்பிக்க வழிநடத்த முடியும். உங்களுடைய தனிப்பட்ட செல்வாக்கின் கூர்மை தன்மையைப் பாருங்கள். உங்களுடைய முன்மாதிரியினால் யார் பரலோகத்தில் இருப்பார்கள்?*

---

குறிப்பு

[1]Zig Ziglar, "Behaviors Bring Nothing but Grief and Turmoil," *Pecos Enterprise, Opinion* [article on-line]; available from http://www.pecos.net/news/arch97a/071697o.htm; Internet; accessed 19 November 2003.